வெளியீடு எண் 116.

# திருக்கடைமுடித் திருப்பதிகம்



சம்பந்தர்

தருமபுர ஆதீனம்



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 116.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# திருக்கடைமுடித் திருப்பதிகம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

௨௫-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

பிரதிகள் 500.

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

சிவமயம்

# முன்னுரை

மலர்தலை உலகத்தில் காணப்படும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதங்களுள் தாம் தாம் செய்த வினைப்பயனால் பிறந்திறந்து உழலும் ஆன்மாக்கள் யாவும் இன்பத்தைப்பெற விரும்புமேயன்றித் துன்பத்தைப்பெற ஒருபொழுதும் விரும்பாது என்பது யாவரும் அறிந்ததே. அவ்வின்பம் கால அளவுக்குட்பட்டு மகிழ்வைத் தந்து பின்னர் அழிந்தொழிவதும், காலவரையறையில்லாமல் எப்பொழுதும் நிலைபேறான மகிழ்வைத்தருவதும் என இருவகைப்படும். அவை முறையே சிற்றின்பம் பேரின்பம் எனப் பெயர்பெறும். இன்பத்தைப்பெற விழைந்த உயிர்கள் அவ்வின்பத்தின் பாகுபாட்டை அறியுமாயின் இரண்டாவதாகிய பேரின்பத்தைப்பெற அவாவுமேயன்றி முதலிற் கூறிய சிற்றின்பத்தைப்பெற எப்பொழுதும் விரும்பாது. அப்பேரின்பந்தான் யாது?

எனில், எல்லாமாய் அல்லதுமாய் விளங்கும் இறைவனது திருவடித்தாமரையைச் சார்ந்து அதன் கீழ் இருத்தலாம்.

இந்திரன், திருமால், பிரமன் முதலியோர்களது பதவிகளெல்லாம் ஒருகாலத்திலிருந்து மற்றொருகாலத்து அழியுமேயன்றி இறைவனடிசாரும் இன்பத்தைப்போல் நிலைபேறுளவையல்ல. ஆனது பற்றியேதான் "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" எனவும், "நூறுகோடி பிரமர்கள் நொங்கினார், ஆறுகோடி நாராயணர் அங்ஙனே, ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர், ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" என்றும் திருமுறைகள் உபதேசிக்கின்றன.

ஆகவே முற்கூறிய அந்தமில் இன்பத்தழிவில் வீடாகிய பேரின்பத்தினை உயிர்கள் அடையவேண்டும் என்ற பெருங்கருணையினாலேயேதான் இறைவன் உயிர்களிடத்தில் தன்னைச் "சிந்தனை செய்ய மனம் அமைத்து, செப்ப நா அமைத்து, வந்தனை செய்யத் தலையமைத்து, கை தொழ அமைத்து, பந்தனை

செய்வதற்கு அன்பு அமைத்து" தானும் இலிங்காதி திருமேனிகள் தாங்கிச் சிவால யங்கடோறும் எழுந்தருளியிருக்கின்றான். அத்தகைய சிவாலயங்கள் பல உளவேனும் திருஞானசம்பந்தசுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர்களாலும் திருவாய்மலர்ந்தருளப்பெற்ற திருப்பதிகங்கள் பெற்றன இருநூற் றெழுபத்துநான்கென எண்ணிக் கணக்கிடப் பெற்றுள்ளது.

திருக்கடைமுடி என்னும் இத்தலம் காவிரி யின் வடகரைத்தலங்களுள் ஒன்றாகும். இறைவன் **கடைமுடிநாதர்** இறைவி **அபிராமி யம்மை** திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றுமட்டும் இத்தலத்திற்குக் காணப்படுகின்றது. மாயூரத்திற்கு வட கிழக்கே 8-கல் தொலைவிலுள்ள திருநனி பள்ளி என்னும் தலத்தை அடைந்து அங் கிருந்து வடமேற்கே 1-கல் தூரஞ்சென்றால் இத்தலத்தை அடையலாம்.

திருக்கயிலாயபரம்பரைத்தருமபுர ஆதீனத் தில் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதான

மாக எழுந்தருளியிருந்து அருட்செங்கோல் செலுத்திவருகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** தாம் ஞானபீடத்தில் எழுந்தருளி யது முதல் "சைவசமயத்தை யாங்கணும் பரப்பவேண்டும்; அதன் உண்மையினை யாவ ரும் அறியச்செய்யவேண்டும்" என்பதையே குறிக்கோளாக் கொண்டு செய்தருளுகின்ற பணிகள் பலவாகும். அவைகளுள் ஆதீனச் சார்பில் சிவதலங்கள்தோறும் பெருமானுக்கு விசேஷஅபிஷேக ஆராதனை செய்வித்தலும், ஆராதனை காலத்தில் அந்தந்தத் தலப்பதிகங் களை முறைப்படி ஓதச்செய்து ஒவ்வொரு பதிகத்தின் முடிவிலும் கற்பூர ஆராதனை செய்யச் செய்தலும், பதிகங்களைத் தனியே சிறுசிறு புத்தகமாக அச்சிடுவித்து அன்பர் கட்கு வழங்கச்செய்தலும் ஒன்றாகும். அத் திருவுள்ளப்பாங்கின்படியே **திருக்கடைமுடித் திருப்பதிகம்** என்னும் இந்நூல் வெளிவந் துள்ளது. அன்பர்கள் பாராயணஞ்செய்து **ஸ்ரீ கடைமுடிநாதர்** திருவருளால் எல்லா நலன்களும்பெற்று உய்வார்களாக.

### தலப்பதிகம் அருளிச் செய்த

## திருஞானசம்பந்தர் சிறப்பு

இவர் சீகாழிப்பதியிலே கவுணியர் குலத்தில் அவதரித்தவர். தந்தையார் சிவபாதவிருதயர். தாயார் பகவதியம்மையார். இவர் தமது மூன்றாம் பிராயத்திலே தந்தையாரோடு பிரமதீர்த்தத்திற்கு வந்தபோது நீருள் மூழ்கிய தந்தையைக் காணாது திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே! அப்பா!! என்று அழுது, இறைவன் ஆணைப்படி அம்மையாரளித்த சிவஞானப்பாலை அருந்திச் சிவஞான சம்பந்தராயினார். அன்றே தலயாத்திரை செய்ய எண்ணிப் புறப்பட்டார். அடியார் குழாங்களும் பின்சென்றன. பல நாட்டுத் தலங்களையும் தரிசனம் செய்தார். இன்றியமையாத காலங்களில் இறைவன் அருளால் வந்த பொற்றாளம், முத்துப் பல்லக்கு முத்துச்சின்னம், முத்துக்குடை, முத்துப்பந்தர், பொற்கிழி, படிக்காசு முதலி

யனவும் பெற்றார். திருமறைக்காட்டில் அப்பர் திறந்த திருக்கதவை மீண்டும் அடைக்கப்பாடினார். பாலையை நெய்தலாக்கினார் பாண்டியனுக்குக் கூனையும் சுரத்தையும் போக்கினார். ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினார். விடந்தீண்டி இறந்த வணிகனை உயிர்பெறச்செய்தார். எலும்புகளைப் பெண்ணாக்கினார் சமணர்களை அனல்வாதம் புனல்வாதம் முதலியவாதங்களினாலே வென்றார். அப்பொழுதுதான் தீயிலிட்ட ஏடு வேகாதிருந்து சைவசமயத்திற்கு உயிர் தந்தது; ஆற்றிலிட்ட ஏடு எதிரேறிச் சென்றது கடைசியில் ஆச்சாள்புரத்தில் நம்பாண்டார் நம்பிகள் புதல்வியாரைத் திருமணங்கொண்டருளுங் காலத்து திருமணந் தெரிசிக்கவந்த அனைவரையும் சோதியுட் புகுவித்துத் தாமும் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு சோதியுட் புகுந்தார்.

சிவமயம்



# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

**பண் - வியாழக்குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

அருத்தனை யறவனை யமுதனை நீர்
விருத்தனைப் பாலனை வினவுதி ரேல் ய
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே. க

திரைபொரு திருமுடி திங்கள் விம்மும்
அரைபொரு புலியத ளடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனை நீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே. உ

ஆலிள மதியினொ டரவுகங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுதிறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலனை வளநகர் கடைமுடியே. ௩

கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவனூர்
பையணி யரவொடு மான்மழுவாட்
கையணி பவனிடங் கடைமுடியே. ௪

மறையவ னுலகவன் மாயமவன்
பிறையவன் புனலவ னனலுமவன்
இறையவ னெனவுல கேத்துங்கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே. ௫

படவர வேரல்குற் பல்வளைக்கை
மடவர லாளையோர் பாகம்வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுடன் வளநகர் கடைமுடியே. ௬

பொடிபுல்கு மார்பினிற் புரிபுல்குநூல்
அடிபுல்கு பைங்கழ லடிகளிடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே. ௭

நோதல்செய் தரக்கனை நோக்கழியச்
சாதல்செய் தவனடி சரணெனலும்
ஆதர வருள்செய்த வடிகளவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே. ௮

அடிமுடி காண்கில ரோரிருவர்
புடைபுல்கி யருளென்று போற்றிசைப்பச்
சடையிடைப் புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடி யதனயல் காவிரியே. ௯

மண்ணுதல் பறித்தலு மாயமிவை
எண்ணிய காலவை யின்பமல்ல
ஒண்ணுத லுமையையோர் பாகம்வைத்த ௭
கண்ணுதல் வளநகர் கடைமுடியே. ௧௦

பொன்றிகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தனசொன்ன
இன்றமி ழிவைசொல வின்பமாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

## ஞானசம்பந்தர் தோத்திரம்

மட்டுவிரி நறுந்துளப மாலாலும்
அயனாலு மறையினாலும்
சுட்டியறி யாதபெருஞ் சுகப்பொருளை
ஒருவிரலாற் சுட்டிக் காட்டி
மொட்டிளமென் முலையுமையாள் கொடுப்பவருந்
தியஅமிழ்த முழுது மாங்கே
கொட்டியது போற்கவிதை கொழித்தகவு
ணியர்மணிதன் குலத்தாள் போற்றி.

பரசமய கோளரியைப் பாலறா
வாயனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெல்லாஞ்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும்
கவுணியர்தம் குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.